# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2031 கார்த்திகை 5 திங்கட்கிழமை(20-11-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:291


## கொட்டும் மழைக்கு மத்தியில்

# மட்டுவில் தெற்குப் பகுதியில் பெரும் படை நடவடிக்கை!

## ஆறு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தை கைப்பற்றியதாக இராணுவம் அறிவிப்பு

கொழும்பு,நவம்பர்20

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மட்டுவில் தெற்குப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காகப் பெரும் படை நடவடிக்கையை இராணுவத்தினர் நேற்று அதிகாலை முதல் மேற்கொண்டுள்ளனர்.**

**'கினிஹிர - 4' எனப் பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கையின்போது படையினர் அப்பகுதியில் ஆறு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றி நிலை கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது.**

நேற்று அதிகாலை கடும் மழை பெய்துகொண்டிருந்த சமயம் இந்தப் படை நடவடிக்கை ஆரம்பமானது. படையினர் ஏவிய ஷெல் மற்றும் பல்குழல் பீரங்கிச் சத்தங்களால் நேற்று முழு நாளும் குடாநாடு அதிர்ந்தது.

இந்த நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதா

(10.ஆம் பக்கம் பார்க்க)

## தளபதிகள் பலாலியில்

யாழ்ப்பாணம்,நவ.20

மட்டுவில் தெற்குப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்பார்வை செய்வதற்காக படைத் தளபதிகள் பலாலியில் தங்கியிருந்ததாகத் தெரிய வந்தது.

கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ரொஹான் தளுவத்த, இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, விமானப் படைத் தளபதி ஏயார் வைஸ் மார்ஷல் ஜெய்லத் வீரக்கொடி ஆகியோர் பலாலியில் தங்கியிருந்து நடவடிக்கையை மேற்பார்வை செய்வதாக அறிய வந்தது. (ஐ-3)



**யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை கடந்த 8 மாதகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.**

**கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற முதலாவது விமானத்தில் கொழும்பு சென்று இறங்கிய பயணிகளில் சிறுமி ஒருத்தியை படத்தில் காணலாம். இருதய சந்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக இச் சிறுமி கொழும்பு சென்றுள்ளார்.**

*(படம்: றொய்ட்டர்)*

# கிழக்கில் கடும் மழை! வெள்ளப் பெருக்கு!!

## மக்கள் இடம்பெயர்வு! இயல்பு நிலை பாதிப்பு

மட்டக்களப்பு,நவ.20

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் அங்கு பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஷந்தாறுமூலையில் உப்போடைப பாலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் சின்னத்தம்பி பிரதீபன் (வயது 26) என்ற இளைஞர் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். அவரது சடலம் நேற்றிரவுவரை மீட்கப்படவில்லை.

மழையுடன் பலத்த காற்று வீசுவதால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

வாகரை, சித்தாண்டி, கன்னங்குடா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த எண்ணாயிரம் குடும்பங்கள் பாதிக்

(10.ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. நகரம் இருளில்

மட்டக்களப்பு,நவ.20

மட்டக்களப்பு நகரப் பகுதி நேற்று மாலை முதல் மின் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியுள்ளது.

மட்டக்களப்பு நகரப் பகுதிக்கு இங்கினியாகலவில் இருந்து உயர் வலு மின்னை விநியோகிக்கும் மின் மார்க்கத்தில் உள்ள ஏழு பிரதான மின் தூண்கள் மழை வெள்ளம் காரணமாகச சாய்ந்து வீழ்ந்ததை அடுத்தே அங்கு மின் விநியோகம் தடைபபட்டிருக்கிறது.(ஐ-21-3)

## வன்னிப் பிரதேசத்திலும் மழையால் மக்கள் பாதிப்பு

வவுனியா,நவ.20

வன்னிப் பிரதேசத்திலும் கடந்த மூன்று தினங்களாகக் கடும் மழை பெய்து வருகிறது. பலத்த மழை காரணமாக வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் 9 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளம் காரணமாக சிறு சிறு குடிசைகளில் தங்கியிருந்த மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொதுக் கட்டடங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இரணைமடு உட்பட வன்னியில் உள்ள பல குளங்களின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வெளிமாவட்டம் செல்லும் பயணிகள்

# பாதுகாப்பு அனுமதிப் பட்டியலை இன்று முதல் பார்வையிட வசதி

யாழ்ப்பாணம்,நவ.20

வெளிமாவட்டங்களுக்குச் செல்லும பொதுமக்கள் தமது பாதுகாப்பு அனுமதியைச் சரிபார்ப்பதற்கான பணிகள் புதிய நடைமுறைப்படி இன்று ஆரம்பமாகும் என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை ('றான்') அதிகாரியான எஸ். குகராஜன் தெரிவித்தார்.

தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு இன்றும், 512 ஆவது பிரிகேட்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நாளையும், 513ஆவது பிரிகேட் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினமும் பிற்பகல் 2. மணி முதல் 4 மணிவரை இந்தப்பணி இடம்பெறும என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள விமானச் சேவைக்கான

(10.ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மூவர் முகாம் திரும்பினர்

கொழும்பு,நவ.20

ஓமந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின்போது காணாமற்போன ஏழு படையினரில் மூவர் பின்னர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதலின்போது ஓர் அதிகாரியும் ஆறு படையினரும் காணாமல் போய்விட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர்களில் மூன்று படையினர் அன்று மாலை 6.30 மணியளவில் முகாம் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சியில்

# ஜனாதிபதியை அவதூறாகப் பேசிய இளைஞன் உடனடியாகக் கைது!

கொழும்பு,நவ.20

இலங்கை வானொலி சிங்கள சேவையில் நேற்று இடம்பெற்ற தொலைபேசி மூலம் நேயர்களுடன் உரையாடும் நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் உரையாடிய இளைஞர் ஒருவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார்.

பிரஸ்தாப இளைஞர் ஜனாதிபதியை அவதூறாகப் பேசியதை அடுத்து வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் உடனடியாக தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தார்.

(10.ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதிச் சிறைகளில் உள்ள

# தமிழ்க் கைதிகளை இடம்மாற்றுமாறு சட்டமா அதிபரைக் கோர முடிவு!

## பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம்,நவ.20

தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை தமிழ்ப் பகுதிகளிலுள்ள சிறைகளுக்கு இடம்மாற்ற வேண்டும் என்று வடக்கில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் சட்டமா அதிபரிடம் கோரவுள்ளது.

நேற்று நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில் இது தொடர்பாகப் பிரதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்காக அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

○ 1996 ஆம் ஆண்டு யாழ்.

(10.ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(19-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 805,582**

# வாழ்த்துகின்றோம்



எமது திருச்சபையின் முன்னாள் செயலரும் தற்போதைய நிர்வாக ஆதினப் பிரதிநிதியுமான

**லயன்**

**எஸ்.ஜே.செல்வராஜா**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை நினைவுகூர்ந்து அவரின் சமூகப் பணி சிறப்பாக நடைபெற இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

சபை ஊழியரும், சபையாரும்

**தென்னிந்தியத் திருச்சபை**

மானிப்பாய். (80701)

# கண்ணீர் அஞ்சலி

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர்

செல்வி ப.வீரகத்திப்பிள்ளை

அவர்களின் தந்தையார்

**திரு.கணபதி வீரகத்திப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை, - A97 தாதியர்கள்.
யாழ்ப்பாணம். (80699)

# கண்ணீர் அஞ்சலி

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர்

செல்வி ப.வீரகத்திப்பிள்ளை

அவர்களின் தந்தையார்

**திரு.கணபதி வீரகத்திப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- A 94 தாதியர்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (80700)


## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம்,நவ.20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து வாழும் 2025 குடும்பங்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவு நாளை செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய் காலை 9மணி தொடக்கம் ஜே-91 கிராமசேவகர் பிரிவுக்கும், ஜே-113 கிராமசேவகர் பிரிவுக்கும் இடைப்பட்ட இடம்பெயர்ந்து வாழும் 1043 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும்

புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஜே-114 தொடக்கம் ஜே-128 வரையான கிராமசேவகர் பிரிவுக்கும் இடம்பெயர்ந்து வாழும் 982 குடும்பங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொடுப்பனவை பெறவரும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது பகுதி கிராமசேவையாளரிடம் இருந்து இடம்பெயர்ந்திருப்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-6-5-10)

## பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,நவ.20

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உப அதிபரின் மரணம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களும் யாழ்நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களான கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தியாகராசா ரவீந்திரன், செல்லன் மாணிக்கம் ஆகியோர் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-5-6)


**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல்

**விஜய், சிம்ரன், மணிவண்ணன்**

மற்றும் பலரின் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட

*துள்ளாத மனமும் துள்ளும்*

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)


## டிசம்பரில் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் எதிர் வரும் டிசம்பர் மாதம் பத்தாம் திகதி முதல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)


**நாகம்ஸ்** சுன்னாகம்

**அர்ஜுன், ரோஜா, ரம்பா, ஆனந்தராஜ்**

நடித்த

**அடிமைச்சங்கிலி**

(ரீஸ்ஸ்)காட்சிகள் - 11.00, 2.30 (பு.நே.)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் தர்ஷிகன்

**நிரஞ்சன் ~ கிருஷாந்தி தம்பதிகளின்**

*செல்வப் புதல்வன் தர்ஷிகன்*

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20-11-2000) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, வவா அன்ரா, ஜெனா, மேனன், ரம்யா, நிலானி, பாட்டா, பாட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:

ந.நிரஞ்சன்(அப்பா)

*தம்பசிட்டி,*
*பருத்தித்துறை.*

**சக்தி கொமினிக்கேசன்**
ஓடக்கரை, பருத்தித்துறை.

உள்நாடு : 070 - 212570
வெளிநாடு : 0094 - 70-212570

(80633)

# மங்களகரமான திறப்பு விழா

உ
ஓம் முருகா



**நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையால் அமைக்கப்பெற்ற**

## நெல்லை முருகன் திருமண மண்டபம்

**நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை**

## பாலர் பாடசாலை மண்டபம் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் கார்த்திகை மாதம் 5ஆம் நாள் இன்று (20.11.2000) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.15 மணி வரையிலான கும்பலக்கின பூர நட்சத்திர சுபவேளையில்.....

மங்கள இசை : கானமூர்த்தி நாதஸ்வரக் குழுவினர்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**ஆலய பரிபாலன சபை,**
நெல்லியடி தடங்கன் புளியடி, முருகமூர்த்தி கோயில்.

விளம்பர அன்பளிப்பு:

**ஜெசீபா ஏஜென்சி** மிட்சுபி சிமெந்து ஏகமுகவர்கள்

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப் படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணை யேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித் திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள் கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறி கொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிர சுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியா ளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கை யாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| 18.11.2000 (சனிக்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 786,570 |
| 1. லயன்ஸ் கழகம் - கோப்பாய் | - 10,000 |
| 2. ஆ. வேலுப்பிள்ளை - தாவடி | - 300 |
| 3. ஓர் அன்பர் - அமரர் ஜெகநாதன் பூபாலராசா ஞாபகார்த்தமாக, 105/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம் | - 500 |
| 4. ஓர் அன்பர் - வட்டுக்கோட்டை | - 100 |
| 5. எஸ். ஆசை சோதிராஜன் - சங்கானை மேற்கு, சங்கானை | - 100 |
| 6. சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் - தம்பசிட்டி, பருத்தித்துறை | - 500 |
| 7. நலன்புரிச்சங்கம் பிரதேச செயலகம் - வலி. தெற்கு, உடுவில் | - 2,811 |
| 8. செ. ஜெகசோதி - செம்பருத்தி, பருத்தித்துறை | - 500 |
| 9. விவேகானந்தா சனசமூக நிலையம் - கோண்டாவில் | - 2,000 |
| 10. பொ. மாணிக்கப்பிள்ளையார் - அளவெட்டி | - 200 |
| 11. அமரர் ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு நினைவாக - கல்விப் புலமைப்பரிசில் நிதியம் நெடுந்தீவு | - 501 |
| மொத்தம் | 804,082 |

# சேவைநலன் பாராட்டும் அறுபதாவது அகவை வாழ்த்தும்

20.11.2000



## உப அதிபர் திரு.சி.சிவசுப்பிரமணியம்

எமது பாடசாலையில் நீண்டகாலமாக உபஅதிபராக, பதில் அதிப ராக சேவையாற்றியவரும் பாடசாலை அபிவிருத்திக்கு உழைத்தவருமா கிய திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்கள் 20.11.2000ஆம் ஆண்டில் சேவை யிலிருந்து ஓய்வு பெறுகின்றார். தனது அறுபதாவது அகவை காணும் அவர் மனநிறைவுடனும் ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கொக்குவில்.**

(80689)

## எழுவைதீவில் நடமாடும் செயலகச் சேவை

காரைநகர்,நவ.20

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மூன்றாவது நடமாடும் செயலகச் சேவை எழுவைதீவில் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிதொடக் கம் முருகவேள் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நடமாடும்செயலகச் சேவை யில் பொதுமக்களால் முன் வைக் கப்படும் பிரச்சினைகள், முறைப்பாடு கள் என்பவற்றை ஆராய்ந்து அன் றைய தினமே தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, காலங் கடந்த பிறப்பு, இறப்புப் பதிவு, காலங் கடந்த விவாகப் பதிவு, பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரம், இடம்பெயர்ந்தோர் நிவார ணம், கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணம் -

பொதுசன மாதாந்த உதவிப்பணம், மீள்குடியமர்ந்த மற்றும் வீடமைப்புக் கொடுப்பனவுகள், கிராம அபிவிருத்தி, சனசமூக அபிவிருத்தி, பனை தென்னை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி -

கடற்றொழில் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, கால்நடை அபிவி ருத்தி மற்றும் மின்சாரம், வங்கிச் சேவைகள், சுகாதார சேவைகள், ஓய்வூதியக் கொடுப்பனவு, உள்ளூராட் சிச் சேவைகள், கல்வி, பாடசாலை கள், குடிதண்ணீர் விநியோகம், படகுச் சேவை ஆகிய விடயங்கள் சம்பந்த மான சேவைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பொதுமக்கள், சங்கங்கள், நிறுவனங்கள் முற்கூட்டியே தங்கள் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை அவரது கவனத்துக்கு கொண்டுவருமாறு ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் அறிவித் துள்ளார்.

(இ-73)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

கொழும்பு,நவ.20

முல்லைத்தீவு மாவட்டம் - அலம் பில் பகுதியில் அமைந்திருந்த விடு தலைப் புலிகளின் முகாம்கள் மீது கடந்த வெள்ளி காலை விமானப் படையினர் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 12 பேர் உயிரிழந்த னர்; 12 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்களில் 2 பேர் விடுத லைப்புலிகளின் பெண்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் - விசேட ஊடகத் தகவல் நிலைய அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

## திருமலையில் கிளைமோர் தாக்குதல்!

திருகோணமலை,நவ.20

திருகோணமலை மாவட்டம்- பாரதிபுரம் பகுதியில் நேற்று முன் தினம் காலை கிளைமோர்த் தாக்கு தல் நடத்தப்பட்டதில் படையினர் பயணம் செய்த டிரக் ஒன்று பலத்த சேதமடைந்தது.

டிரக்கில் பயணம் செய்த படை யினர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் திருகோண மலை ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

(இ-7-145)


# COMPUTER & COMPUTER ACCESSORIES



※ பிறந்ததின வாழ்த்து மடல்கள்

※ திருமண வாழ்த்து மடல்கள்

※ கடிதத் தலைப்புகள்

மற்றும் சகல விதமான கடிதங்கள் யாவற்றையும்

※ நவீனமுறையில் ※ உயர்ந்த தரத்தில் ஒரே இடமாக

*COMPUTER TYPING & PRINTING* செய்து கொள்ளவும்

※ தொலைத்தொடர்பு ※ பக்ஸ் ※ போட்டோ பிரதிகள்

இன்னும் பல சேவைகளை பெற்றிடவும் நாடுங்கள்:

**SRI MURUGAN COMMUNICATION**

**COMPUTER SYSTEMS**

303, K.K.S. ROAD, JAFFNA.

T.P No: 021 - 2670,3214,3588. (C/13898) FAX: 021 - 3214


# இதய அஞ்சலி

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர்

செல்வி பரமேஸ்வரி வீரகத்திப்பிள்ளை

அவர்களின் தந்தையார்

அமரர்

## கணபதி வீரகத்திப்பிள்ளை

அவர்கள் நேற்று 19.11.2000 சிவபதம் எய்தியதையிட்டு துயருற் றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின்றோம்.

**போதனாசிரியர்கள், தாதிய பாடசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.**

(80696)

# 31 ஆம் நினைவு நாள்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 02 - 01 - 1919 |  | 21 - 10 - 2000 |

அமரர்

## வல்லிபுரம் சாமுவேல் ஆழ்வாப்பிள்ளை

**(ஓய்வு பெற்ற அதிபர்)**

21-10-2000 அன்று இறைபதம் அடைந்த எமது தந்தையின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (20-11-2000) திங்கட்கிழமை கட்டைவேலி மெத டிஸ்த திருச்சபையில் மு.ப.11.00 மணிக்கு நடைபெறும் ஸ்தோத்திர வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து அன்னா ரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலவத்தை,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

(80693)

**பிள்ளைகளும், குடும்பத்தினரும்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணுலக வாழ்வில் | | விண்ணுலக வாழ்வில் |
|---|---|---|
| 12 - 10 - 1933 |  | 22 - 10 - 2000 |

தென்புலோலியை பிறப்பிடமாகவும்

தற்போது

கனடா, ஒன்ராரியோவை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் வை.க.சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பெருந்தெருக்கள் திணைக்கள பிரதமலிகிதர், பரந்தன் கணேசன் மில், மாயவன்ஸ் ஆகியவற்றின் உரிமையாளர்)

திதி :- 21-11-2000

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து பலகாலமாய் எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டிய அமரர் வை.க.சுப்பிரமணியம் அவர்கள் வையகவாழ்வை விட்டகன்ற செய்தி கேட்டு நேரடியாக வும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்து எமது துயரில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி யைத தெரிவித்துக் கொள்வதுடன் -

நாளை (21-11-2000) செவ்வாய்க்கிழமை தென்புலோலியூர் அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறவிருக்கும் அன்னதானத்தில அனை வரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

*கோணர் வளவு,*
*புலோலிதெற்கு,*
*புலோலி.*

(C/13906)

**சகோதரம், மைத்துனர்கள், மைத்துனி.**

## அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல்;

# 9,030 தபால் வாக்குகள் அதிகம் பெற்றார் புஷ்

## சட்டப் போராட்டம் தொடர்கிறது

வாஷிங்ரன், நவ, 20
அமெரிக்க அதிபர் தேர்தலில் அளிக்கப்பட்ட வெளிநாட்டு அமெரிக்கர்களின் தபால்மூல வாக்குகளில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் டபிள்யூ-புஷ் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோரை விட 9030 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார்.

ஆனாலும் இரு வேட்பாளர்களிடையே நீதிமன்றத்தில் நடைபெறும் சட்டப்போராட்டம் முடிவுக்கு வரவில்லை.

புளோரிடா மாகாணத்தின் 4 கவுண்டிகளில் ஆள்கள் மூலம் வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்ட போது புஷ் கூடுதலாகப் பெற்றிருந்த வாக்குகள் 300 ஆகக் குறைந்ததை அடுத்து மேலும் சில கவுண்டிகளில் ஆள்கள் மூலம் வாக்குகளை எண்ண உத்தரவிடக்கோரி புளோரிடா நீதிமன்றத்தில் அல்கோர் மனு தாக்கல் செய்தார்.

இதனை எதிர்த்து புளோரிடா மாகாண தேர்தல் சட்டப்படி போட்டி தீவிரமாக இருக்கும் போது ஆள்கள் மூலம் வாக்குகளை மறுபடி எண்ணமுடியாது என்று சுட்டிக்காட்டி புஷ் பதில் மனுத் தாக்கல் செய்தார். இந்த இரு மனுக்கள் மீதான விசாரணை இன்று நடைபெற உள்ளது.

தனக்கு ஆதரவான நூற்றுக்கணக்கான வாக்குகள் கணனி மூலம் எண்ணப்பட்ட போது சேர்க்கப்படவில்லை என்று அல்கோரும்,

போட்டியாளருக்குச் சாதகமான பகுதிகளில் மட்டுமே மறுவாக்கு எண்ணிக்கைக்குக் கோரப்படுவதால் இது நியாயமற்றது எனப் புஷ்ஷும் தத்தமது தரப்பில் வாதிடுகின்றனர்.

அமெரிக்க உச்ச நீதிமன்றம் இறுதி முடிவு அறிவிப்பதற்கு விதித்துள்ள தடை. புளோரிடா நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே விலக்கிக் கொள்ளப்படும் எனக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் அடுத்த அதிபரை முடிவு செய்யப் போகும் தீர்ப்பை வழங்க உள்ள புளோரிடா நீதிமன்றத்தின் பக்கம் அனைவரது பார்வையும் திரும்பியுள்ளது.

## உலக அரங்கில்

## காஷ்மீர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட

# தீவிரவாதியும் மிதவாதியும் பிள்ளைகளால்சம்பந்திகளாயினர்

ஸ்ரீநகர், நவ. 20
பாகிஸ்தானைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் தீவிரவாத அமைப்பான ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தளபதி அமானுல்லாகானும், இந்தியாவிலிருந்து செயற்படும் மிதவாத அமைப்பான குரியத் மாநாடு கட்சியின் தலைவர் அப்துல் கனிரும் தமது பிள்ளைகளின் திருமணத்தை அடுத்து சம்பந்திகள் ஆகியுள்ளனர். இவர்களிடையே ஏற்பட்டுள்ள உறவு காஷ்மீர் பிரச்சினையில் புதிய பரிமாணத்தை உருவாக்கும் என்று கருதப்படுகிறது.

தமது பிள்ளைகளுக்கு நடந்த திருமணம் வரலாற்று நிகழ்வு என்று அமானுல்லாகானும் சமூக நிகழ்வு என்று அப்துல்கனிரும் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீர் இந்தியாவிலிருந்து பிரிந்து பாகிஸ்தானுடன் இணைய வேண்டும் என்று கோரி தீவிரவாதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அமானுல்லாகானை இந்திய ராஜதந்திரி ஒருவரைக் கடத்திச் சென்று கொலை செய்ததற்காக இந்திய அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

காஷ்மீர் பிரிக்கப்படாத தனி மாநிலமாக இருக்க வேண்டும் என்று அப்துல் கனிர் வலியுறுத்தி வருகிறார்.

சம்பந்திகளில் யார் எவரை எவர் பக்கம் மாற்றப் போகிறார்கள் என்பதில் காஷ்மீர் அமைதி தங்கியுள்ளதாகக் கருதப்படுகிறது.

[ஒ-7]

## இந்திய அரசுக்கு கிறிஸ்தவர்கள் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 20
இந்தியாவில் கிறிஸ்தவ விவாகரத்துத் தொடர்பான சில விதிகளைத் திருத்தும் மத்திய அரசின் முடிவை முக்கிய தேவாலயங்களின் திருச் சபைகள் எதிர்த்துள்ளன.

கிறிஸ்தவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் மத்திய அமைச்சரவை இந்த முடிவை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

## பங்களாதேஷில் படகு கவிழ்ந்து 12 பேர் பலி!

பங்களாதேஷில் தென் கிழக்கு டாக்காவில் மேதினா நதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 12 பேர் நீரில் மூழ்கி இறந்தனர்.

# வீரப்பனைப் பிடிப்பது சிரமமல்ல; கர்நாடக முதல்வர் தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 20
சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பது சிரமமான காரியம் அல்ல என்று கர்நாடக மாநில முதல்வர் எஸ். எம் கிருஷ்ணா கூறியுள்ளார்.

நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்டது தொடர்பாக மத்திய அரசிடம் விளக்கம் தர புதுடில்லி வத்த அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கர்நாடக முதல்வர் மேலும் தெரிவிக்கையில் வீரப்பன் இன்னமும் குற்றவாளிதான். ஆகவே அவனைப் பிடிப்பதில் மாநில அரசுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. நடிகர் ராஜ்குமாரை விடுவித்ததற்காக வீரப்பனுக்கு பொது மன்னிப்பு, பிணைத்தொகை போன்ற எதுவும் வழங்கப்படவில்லை.

தற்போது வீரப்பன் கர்நாடக மாநில அரசுக்குச் சொந்தமான காட்டுப்பகுதிக்குள் இல்லை. ஆகவே தமிழக அரசுடன் கூட்டாக ஓர் உத்தியை வகுத்து செயற்படுத்த உள்ளோம்.

நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதை ஒரு பாடமாகக் கொண்டு இத்தகைய சம்பவங்கள் இனி வரும் காலத்தில் இடம்பெறாமல் தடுக்க தேசிய அளவில் ஒரு திட்டத்தை வகுக்கலாம் என்று இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

இதற்கிடையில் —

வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும்,

இந்த நடவடிக்கைகளில் மத்திய கர்நாடக அரசுகள் விசேட அதிரடிப்படையை ஈடுபடுத்தவேண்டும் என்றும் கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே வலியுறுத்தியுள்ளார்.

(ஒ-7)

# அமெரிக்காவும் வியட்னாமும் உறவை வலுப்படுத்த வேண்டும்

## பில்கிளின்ரன் கோரிக்கை

கோசிமின்சிற்றி, நவ. 20
கடந்த காலப் போர்ச் சம்பவங்களை மறந்து அமெரிக்காவும் வியட்னாமும் உறவுகளை வலுப்படுத்தி மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் கோரிக்கை விடுத்தார்.

வியட்னாமுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கிளின்ரன் தேசியத் தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் இந்த வேண்டுகோளைத் தெரிவித்தார்.

கடந்த காலத்தை எவராலும் மாற்ற முடியாது என்று தெரிவித்த அமெரிக்க அதிபர், வருங்காலத்தில் அத்தகைய கசப்பான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ள நம் அனைவராலும் முடியும் என்று கூறினார்.

பல ஆண்டுகளின் முன்னர் இடம்பெற்ற அமெரிக்க வியட்னாம் யுத்தத்தில் பல லட்சம் வியட்னாமியர்களை அமெரிக்கப் படைகள் கொன்றபோதிலும் இறுதியில் போரில் தோற்று அமெரிக்கா வியட்னாமை விட்டு வெளியேறியதன் வடுக்கள் இருதரப்பிலும் இன்றும் உள்ளதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 02 | 21 |
| — | — |
| 05 | 10 |
| — | — |
| 1942 | 2000 |

## திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி

கடந்த 21-10-2000 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி அவர்களது இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (20-11-2000) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர். பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

கல்வியங்காடு. (80703)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## முத்துவேலு புலேந்திரன் (மாமா)

மலர்வு: 11 - 04 - 1945
உதிர்வு: 21 - 10 - 2000

அன்போடு எம்மை அரவணைத்துப் பாசத்துடன் காத்து வளர்த்த அன்புத் தெய்வமே! எங்கள் அப்பாவே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு பல வழிகளில் உதவியவர்களுக்கும் அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலியைத் துண்டுப் பிரசுரங்களில் வெளியிட்ட அனைவருக்கும் மலர் மாலைகள், மலர் வளையங்கள், சாந்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் அன்னாரது இல்லத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரி பிள்ளைகள், சகலன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மருமகன் சிறி.

பொன்னையா லேன்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (80702)

# கேள்வி அறிவித்தல்

## கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசானது இரண்டாவது பொதுக் கல்வித்திட்டத்தின் செலவுக்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கடன் கிடைக்கப் பெற்றுள்ளது. இப்பணத்தில் ஒரு பகுதியை கீழே குறிப்பிடப்படும் 04 ஒப்பந்தங்களுக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ''IBRD கடன் மற்றும் IDA கடனின் கீழான விநியோகம்'' வழிகாட்டிகள் குறிப்பிடப்பட்டவாறு தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் சமர்ப்பிக்கப்படலாம். கேள்வித் தரவுகளில் குறிப்பிடப்பட்டவாறு இக்ராட்டுடன் பதிவு செய்த உள்ளூர் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் கேள்வி சமர்ப்பிக்கலாம்.

| கேள்விக் குறியீட்டு இல. | வேலை விபரம் | பதிவுத் தரம் | தேவைப் படும் கேள்விப் பிணை |
|---|---|---|---|
| ஜீ ஈ பி 2/என்ஈ /யா/வட/17 | வாசிகசாலைக் கட்டடங்கள் 7 ஐ மறுசீரமைப்புச்செய் தல வடமராட்சி வலயம் | எம் 6 | 120,000/- |
| ஜீஈபி 2/ என் ஈ/யா/யா/ 18 | வாசிகசாலைக் கட்டடங்கள் 5 ஐ மறுசீரமைப்புச் செய் தல் யாழ்ப்பாண வலயம் | எம் 6 | 85 000/- |
| ஜீஈபி 2/என்ஈ/யா/தீவகம்/ 19 | வாசிகசாலைக் கட்டடம், வகுப்பறை மற்றும் ஆய்வு கூடம் என்பன மறு சீரமைப்புச்செய்தல் தீவக வலயம் | எம் 6 | 100,000/- |
| ஜீஈபி 2/ என் ஈ/ யா/வலி/25 | வாசிகசாலைக் கட்டடங் கள் 8ஐ மறுசீரமைப்புச் செய்தல் வலிகாமவலயம் | எம் 6 | 102,000/- |

2. செயலாளர் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம் அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றது.

**கேள்விப் பொதி 4**

**ஜீ ஈ பி2/ என் ஈ/ யா/ வட/ 17**

01. யா/ நெல்லியடி ம. ம. வி.
02. யா/ வட/ இந்து மகளிர்
03. யா/ புத்தளை ம. வி.
04. யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தி.
05. யா/ கரணவாய் பொன்னம்பல வித்தி.
06. யா/ கம்பர்மலை அ. த. க. பா.
07. யா/ புலோலி த. க. பா.

**கேள்விப் பொதி 5**

**ஜீ ஈ பி 2/ என் ஈ/ யா/ யா/ 18**

01. யா/ யாழ். கன்னியர் மடம் ம. வி.
02. யா/ கொட்டடி நமசிவாயம் வித்தி.
03. யா/ கோப்பாய் சரவணபவானந்தன் வித்தி.
04. யா/ ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் வித்தி.
05. யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி

**கேள்விப் பொதி 6**

**ஜீ ஈ பி 2/ என் ஈ/ யா/ தீவகம்/ 19**

01. யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.
02. யா/ நயினாதீவு ம. வி.
03. யா/ வேலணை கிழக்கு ம. வி.
04. யா/ நாரந்தனை றோ. க. த. க. பா.
05. யா/ நெடுந்தீவு ம. வி.
06. யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.
07. யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தி.

**கேள்விப் பொதி 7**

**ஜீ ஈ பி 2/ என் ஈ/ யா/ வலி/ 25**

01. யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
02. யா/ மாதகல் புனித சூசையப்பர் ம. வி.
03. யா/ நவாலி ம. வி.
04. யா/ அராலி இந்துக் கல்லூரி
05. யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தி.
06. யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.
07. யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தி.
08. யா/ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி.

3. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000 மற்றும் மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா 4,000 தரம் எம் 6 - க்கு அந்தந்த வலயக்கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 2000-11-20 முற்பகல் 10.00 மணி முதல் 2000-12-15 பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிகளுக்கான கேள்வி ஆவணங்களைக்கொள்வனவு செய்யலாம்.

4. கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து கேள்வி 90 நாள்களுக்கும், கேள்விப் பிணை 120 நாள்களுக்கும் செல்லுபடியானதாக இருக்க வேண்டியதோடு ஒவ்வொரு கேள்வியும், கேள்வித்தரவில் குறிப்பிடப்பட்ட கேள்விப் பிணை இணைக்கப்பட்டு, 2000-12-22 பிற்பகல் 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், கேள்விச் சபை, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும். அதேநேரம் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி முன்னிலையில் இக்கேள்விகள் திறக்கப்படும்.

5. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை அந்தந்த வலயக் கல்விப்பணிமனைகளில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**க. பரமேஸ்வரன்**
தலைவர்/செயலாளர்,
கேள்விச் சபை,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி/13855)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
11-09-1925

இறைவன்
திருப்பாதத்தில்
02-12-1999

## அமரர் தம்பு அப்புத்துரை
(இளைப்பாறிய P. W. D உத்தியோகத்தர்)

திதி: கார்த்திகை அபரபட்க்ஷ தசமி
**சிரார்த்த நாள்- 20-11-2000 திங்கள்**

கண்முன்னாம் தெய்வமெனக்
கனிவாக எமை மகிழ்த்தே
கரந்து சென்ற பொழுது முதற்
கனவினிலும் நின் னினைவே!
புண்ணியமே உங்களுக்காம்
புரிகைம்மா றேதறியேம்
புனர்ஜென்மம் தனிலுதித்துப்
பொன்முகத்தைக் காண்பியுங்கோ!

என்றும் உங்கள் நினைவில்
அ. சரஸ்வதி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குமணாயந்தோட்டம்,
நவிண்டில்,
கரணவாய் வடக்கு.
(80538)

# மரண அறிவித்தல்கள்

## கணபதி வீரகத்திப்பிள்ளை

சிவன் கோவிலடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாக கொண்டவரும், தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர் இல்லத்தில் வசித்தவரும் ஆகிய கணபதி வீரகத்திப்பிள்ளை 19 - 11 - 2000 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் மேரியின் அன்புக் கணவரும், செல்வி பரமேஸ்வரி வீரகத்திப்பிள்ளை(தாதிய பயிற்சி பாடசாலை அதிபர்), செல்வி தங்கம்மா, பத்மராணி [லண்டன்], புஷ்பதேவி [ஜேர்மனி], லக்சுமி [கனடா], மனோகரன் [ஆஸ்திரேலியா], தர்சினி [சங்கானை], புவனராணி [லண்டன்], ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் [லண்டன்], ரமனானந்தன் (ஜேர்மனி], பஞ்சலிங்கம் [கனடா], ராகுலன் [சங்கானை] கபிலன் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகன்யா, சிவபி, தினேஷ்குமார், கௌசிகன், சாலினி ஆகியோரின் அன்புப்பேரனாரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 19-11-2000 ஞாயிற்றுக்கிழமை தாதியர் பயிற்சி பாடசாலை அதிபர் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி ப. வீரகத்திப்பிள்ளை,
தா. ப. பாடசாலை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம். [80691]

## வேலாயுதர் நல்லதம்பி
[பலகாடு, காரைநகர்]

காரைநகர் பலகாடு என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதர் நல்லதம்பி புத்தளத்தில் நேற்று (19—11—2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், ந. பரமசிவம் [அதிபர், யாழ்ற்றன் கல்லூரி காரைநகர்], ந. உருத்திரசிவம் [சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை] ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரி, சுபத்திராதேவி ஆகியோரின் அன்புமாமனாரும், சிவமயூரன், சிவசிந்துஜா, துஷ்யந்தி, இந்திரஜித், நிருஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் புத்தளத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ந. பரமசிவம்
[மகன்]

24, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(80698)

# V. V. M. S.

## மெசின் நகைத் தொழிலகம்

சாவகச்சேரி

தற்காலிக முகவரி: இல 422, கன்னாதிட்டி, K. K. S. வீதி. யாழ்ப்பாணம்.

ஆரம்பம் – 22. 11. 2000

ஓடர்கள் கவனிக்கப்படும்.

உரிமையாளர் : V. V. மகாலிங்கம்.

(80688)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பிரிவின் (கந்தரோடை யா/200) கிராமசேவை அலுவலர்

### திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுக் கடந்த வெள்ளிக்கிழமை (17.11.2000) மல்லாகம் மாவட்ட நீதி மன்றில் சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு கந்தரோடை மக்களாகிய நாம் அவரைப் பாராட்டி அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கந்தரோடைக் கிராம மக்கள்.

சந்தரோடை.
சுன்னாகம். (80680)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது செயலக கிராம அலுவலர்

### திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

அவர்கள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்.

(80669)



## பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(15– 11 – 2000– இடம்பெற்றது)

| | |
|---|---|
| தலைவர் | க சபாநாயகம் |
| உப தலைவர் | வி லோகேஸ்வரன் |
| செயலாளர் | சி சுப்பிரமணியம் |
| உப செயலாளர் | கி கிருஸ்ணகுமார் |
| பொருளாளர் | க. கிருஸ்ணலிங்கம் |
| போஷகர் | A.V துரையப்பா J P |

உறுப்பினர்கள்

1. க. குலேந்திரன்
2. அ. பெனடிக் ஜெயராசா
3. ப. சிறிஸ்கந்தராசா
4. க. ரங்கநாதன்
5. மா. யோகராசா
6. சி. கந்தசாமி
7. த. லோகேஸ்வரன்

சி. சுப்பிரமணியம்
செயலாளர்

(80683)



## வாழ்த்துகின்றோம்

எமது திணைக்கள, கமநல சேவை நிலைய, விவசாய சம்மேளன வங்கி நடவடிக்கைகளுக்கும் விவசாய அபிவிருத்திக்கான விவசாய கடன் வழங்களிலும் நட்புறவோடும், அர்ப்பணிப்போடும் செயற்பட்டு வந்த பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர்

### உயர்திரு. சின்னையா நடராசலிங்கம்

அவர்கள் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
இலிகிதர்கள், நிலைய உத்தியோகத்தர்கள்,
கமநல சேவை நிலையம்,
புலோலி– அம்பன்.

உதவி ஆணையாளர்
பெரும்பாக உத்தியோகத்தர்
(தலைமைப் பீடம்)
கமநல சேவைகள் திணைக்களம்
யாழ். மாவட்டம்.

(80679)


## சித்திரப்பாடக் கருத்தரங்கு

புன்னாலைக் கட்டுவன், நவ. 20

ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சித்திரப்பாடக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

வலயக்கல்வி அலுவலக சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர்களால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் குடாநாட்டில் உள்ள சகல மாணவர்களும் கலந்து கொள்ளலாம். மாணவர்களைப்பாடசாலைச் சீருடையில் சமுகம் தரும்படியும் கோரப்பட்டுள்ளது.

(இ-133)

## பிணைப்பணத்தை மீளப்பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ 20

யாழ். மாவட்ட நீதிமன்றில் செலுத்திய பிணைப்பணம் மீளவழங்கப்பட்டு வருகிறது.

ஜூலை மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்தவர்களுக்கான பிணைப் பண மீளளிப்பு தற்போது நடைபெறுகிறது.

இவர்களில் இதுவரை எட்டுப்பேர் தமது பிணைப் பணத்தை மீளப்பெறவில்லை. எனவும் இவர்களைப் பற்றுச் சீட்டுடன் யாழ். மாவட்ட நீதிமன்றத்துக்கு வந்து பணத்தை பெற்றுக் கொள்ளுமாறும் நீதிமன்றப் பதிவாளர் கோரிஉள்ளார்.

பிணைப்பணத்தைப் பெறாதவர்களின் பெயர் விவரம் வருமாறு—

★ மருத்தின் செபஸ்ரியாம்பிள்ளை (அச்சுவேலி — வடக்கு)

★ றஞ்சினி சிங்கராஜா (அச்சுவேலி—கொலனி)

★ வல்லி சரவணமுத்து (சரவெட்டி மேற்கு)

★ சிவநேசன் றெஜீனா (தாவடி தெற்கு)

★ கந்தையா சண்முகமூர்த்தி (நீர்வேலி மேற்கு)

★ மாலதி குணசிங்கம் (பெனடிற் றோட், அரியாலை மேற்கு)

★ விஸ்வலிங்கம் லோறன்ஸ் (பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி)

★ தங்கராசா மகேஸ்வரி (ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)

(இ-6-10)

## கற்கை நெறிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவகத்தினால் அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த மூன்று கற்கை நெறிகள் 2 ஆயிரத்து 2 ஆம் ஆண்டுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக நிறுவக வட்டாரங்கள் தெரிவித்தன.

உணவு விஞ்ஞான தொழில் நுட்பம், மனைபொருளியல், நூலகவியலாளர் ஆகிய கற்கை நெறிகளை அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கான அனுமதி கொழும்பிலுள்ள தொழில் நுட்ப நிறுவகப் பணிப்பாளரிடம் கோரப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையினை பரிசீலனை செய்த அவர் 2 ஆயிரத்து 2 ஆம் கல்வியாண்டிலேயே இவற்றினை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் நூலகவியலாளர் பயிற்சி நெறி இலங்கை நூலக சங்கத்தின் அனுசரணையுடன் அடுத்த வருடம் முதல் யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ— 5)


## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல் - 2001

நல்லூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிக்கப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100உம் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000மும் செலுத்துவதன் பேரில் இச் சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்;

1. ரூபா 5,00,000திற்கான சொத்துக்களின் சான்றிதழ்.
2. வியாபார பதிவுச்சான்றிதழ்.
3. ICTAD பதிவுச் சான்றிதழ்.
4. பொருள்கள்,சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்.
5. தொழில் நுட்பத் தகுதிச் சான்றிதழ். (வீதி அபிவிருத்தி அதிகார சபை / வீதி அபிவிருத்தித் திணைக்களம் / மாநகர / நகர / பிரதேச சபைகள்/கட்டடம்/நிர்மாணத் திணைக்களம்)
6. தொழில்நுட்பம், வாகனங்கள் உபகரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்.

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் 2001 ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ஏற்கனவே ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்கள் ரூபா 100 செலுத்தி தங்களது ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

பதிவுகள் யாவும் 06—12—2000 ஆம் திகதி 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

க. மணிபல்லவராஜன்
(ஜே.பி.யூ.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(சி/13884)



## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## கண்ணீர்ப் பூக்கள்

அன்னையின் மடியில்

20 – 07 – 1984



ஆண்டவன் அடியில்

20 – 11 – 1989

### சித்திரகலா அமரசேனாபதி

சித்திரமே ஆடி அக மகிழ்ந்து விளையாடினாய்–உன்
மழலைப் பேச்சில் மகிழ்ந்திருந்தோம்–நாம்
எம் குடும்பத்துக்கு ஒளிபரப்பிய விளக்கே–சித்திரா
இன்று எங்கேயம்மா சென்றுவிட்டாய்?
கொடிய அரக்கன் அவன்-மறலி
சிறிதும் தாட்சணியமின்றி வந்தானே அன்று
பறித்தானே உன் உயிரைச் சித்திரா
பதினொரு ஆண்டுகள் கடந்தும் இன்றும்
என்றும் எம் கண்ணில் நீங்காததிரை–உன் நினைவு.
எங்கு சென்று ஆறுவோம் நாம்!
எப்போ உன்னைக் காணுவோம் வாயார
நெஞ்சு கொதிக்குது உள்ளம் ஏங்குது-சித்திரா!

உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, ஆசை அண்ணா (வசி)
பெரியப்பா, மாமி குடும்பம்
மற்றும் உற்றார், உறவினர்.

இ. அமரசேனாபதி,
''சுதாபவனம்'',
மயிலியதனை,
தொண்டமானாறு.

(80617)

# உதயன்

## காரும் போரும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது வர்ண பகவான் சிறிது கருணை காட்டத் தொடங்கியுள்ளான். அதனால் கார்த்திகை மழை பொழிய ஆரம்பித்துள்ளது. அந்தக் கார்மேகங்களுடன்போர் மேகங்களும் குடாநாட்டில் கனத்துச் சூழத்தொடங்கி உள்ளன.

சனிக்கிழமை பகலில் நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்கள், பல்குழல் எறிகணை வீச்சுக்கள் குடாநாடு எங்கணும் ஈர மண்ணூடாக பெரும் அதிர்வை உண்டாக்கின. வீடுகள், ஏனைய கட்டடங்கள் நிமிடத்துக்கு நிமிடம் குலுங்கிக் குலுங்கிப் பதறின; மக்களையும் பதற்றமுற வைத்தன.

சனிக்கிழமை நள்ளிரவு இங்கிருந்து எறிகணை வீச்சு அகோரமாக நடத்தப்பட்டது. வேறு எவரும் சொல்லாமலே அரச படையினரின் இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பமாகிவிட்டது என மக்கள் ஒவ்வொருவரும் ஊகித்துக் கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. அதனை முன்னிட்டு அவர்கள் தாக்குதல் எதனையும் தொடங்குவதற்கு முன்னரே தாம் முந்திக் கொண்டு தடுத்துவிட வேண்டும் என்ற அடிப்படையில் தென்மராட்சியில் இந்தத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த வாரத்தின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முக்கிய இடம் கொடுத்து ஆராயப்பட்டு, வகுக்கப்பட்ட தடுப்பு—எதிர்ப்புத் தாக்குதல்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

குடாநாட்டில் மழை தொடங்குவதற்கு முன்னர் — ஒக்ரோபர் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் — போரை நடத்தி விடுதலைப் புலிகளிடம் இழந்த பகுதிகளை மீட்டுவிடப் போவதாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த கூறிவந்தார். ஆனால் அது நடைபெறவில்லை; கைகூடவில்லை.

முன்னாள் பிரதி அமைச்சரின் அந்தத் திட்டம் அல்லது கூற்று அரசியல் அட்டவணையைக் கொண்டது; தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டது என்று நோக்கப்பட்டது. ஆனால் பிரதி அமைச்சர் அதனை மறுத்தார். அது முழுக்க முழுக்க இராணுவ அட்டவணையே என்றார். எனினும் அமைச்சரின் கணக்குப் பிழைத்துவிட்டது.

மாரி காலம் தொடங்கிய பின்னர் சண்டை செய்தால் வெல்வது கடினம் என்று அனுருத்த நினைத்திருக்கலாம். ஆனால் மாரி காலத்துப் போர் தங்களை எல்லா விதங்களாலும் வாட்டி வதைக்கும் என்று குடாநாட்டு மக்கள் ஏங்குகிறார்கள.

இராணுவ வெற்றியை நாடுபவாகள் மக்களின் கஷ்ட நஷ்டங்கள் குறித்துச் சிந்திப்பதில்லை. மக்கள் நலன்களுக்காகவே உழைப்பவர்களாக நடிக்கும் அரசியல்வாதிகளுக்கும் இதில் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

வாக்கு வாங்கும் வரையும் மக்களின் காலடியில் விழுந்தவர்களும், அவர்களையே தமது வெற்றிக்கு ஏணியாகப் பயன்படுத்தியவர்களும் இப்போது கொழும்பில் தமது வசதிகளையும் பதவிகளையும் சௌகரியங்களையும் பார்த்துக் கொள்கிறார்கள். மழை காலத்திலாவது தாக்குதல்களைத் தவிருங்கள் என்று அரசிடம் வலியுறுத்தக்கூடாதா?

தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்தவர்களாக இரண்டு நாள்களில் கொழும்புக்குப் பறந்தவர்கள் இனி எப்போது குடாநாட்டை எட்டிப் பார்ப்பார்களோ?

# யாழ். கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் எதுவும் கிடையாது

## சமாசத் தலைவர் மறுக்கிறார்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ் மாவட்ட கூட்டுறவுத்துறையில் ஊழல்கள் இல்லை. சமாசத் தலைவராகிய நானும் ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்களும் நேர்மையாகவேநடந்து வருகிறோம். எம்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டை வன்மையாக மறுக்கின்றோம். யாழ். மாவட்டத்திலுள்ள 25 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தூய்மையான சேவையை நாம் புரிந்து வருகிறோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் கூறினார்.

யாழ் மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறை தொடர்பாக சமீபத்தில் சில குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே இந்தச் செய்தியாளர்மாநாட்டைசீ.வி.கே. சிவஞானம் கூட்டினார்.

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் 25 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் பொது முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்து சீ.வி.கே.சிவஞானம் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள பத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறி அடிச்சட்டத்தைக் கொள்வனவு செய்வதற்காக திருகோணமலையிலுள்ள கூட்டுறவு ஆணையாளர் தலா 15 லட்சம் ரூபாவை குறைந்த வட்டிக்கு வழங்கினார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, புலோலி, சுன்னாகம், சாவகச்சேரி, சங்கானை, தென்மராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய சங்கங்கள் அதனைப் பெற்றுக் கொண்டன.

கொழும்பிலுள்ள லங்கா அசோக் லேலண்ட் கம்பனியிடம் கூறுவிலை கோரப்பட்டு லொறிச் சட்டங்களை சமாசமே கொள்வனவு செய்து கப்பல் மூலம் எடுத்து வந்து வழங்கியது.

தெல்லிப்பழை, நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தாங்களாகவே நேரடியாகக் குறிப்பிட்ட கம்பனியிடம் லொறி அடிச் சட்டங்களைக் கொள்வனவு செய்தன. எந்தக் கட்டத்திலும் குறிப்பிட்ட கம்பனியிடம் பத்து லொறி அடிச் சட்டங்களை எமது சமாசம் கொள்வனவு செய்யவில்லை. எட்டு லொறி அடிச் சட்டங்களை எமது சமாசம் கொள்வனவு செய்திருந்தது. மேலதிகமாக எந்த ஒரு லொறி அடிச்சட்டத்தையும் கொடுப்பனவு மூலமோ அல்லது இலவசமாகவோ நாம் பெற்றுக்கொள்ளவில்லை.

சமாசம் கொள்வனவு செய்த எட்டு லொறி அடிச் சட்டங்களும் ஜி எஸ்.ரி. வரி உட்பட தலா 11 லட்சத்து 41 ஆயிரத்து 875 ரூபா பெறுமதி வாய்ந்தவை. இதில் இருபத்தைந்து சத வீதம் எமக்குக் கழிவு வழங்கப்பட்டது. இதுஎமதுசங்கங்களுக்கு கிடைத்த இலாபம் ஆகும். லொறி அடிச்சட்ட கொள்வனவை எந்த ஒரு தனியாரும் கையாளவில்லை. சமாசமும் அதன் இயக்குநர் சபையுமே கையாண்டன.

லொறி அடிச்சட்டம் ஒன்று இலவசமாக எமக்கு வழங்கப்பட்டதாக வெளியான செய்தியைப் பிரஸ்தாபித்து லங்கா அசோக் லேலண்ட் கம்பனியின் சந்தைப்படுத்தும் முகாமையாளருக்குக் கடிதம் ஒன்றை எழுதினோம்.

அதற்கு அவர் பதிலளிக்கையில், லொறி அடிச்சட்டம் ஒன்று கூட்டுறவுச் சங்கத்துக்கு இலவசமாக வழங்கப்பட்டது என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துள்ளார்.

எமது நிறுவனம் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள ஒரு கூட்டமைப்பு நிறுவனம். இந்த நிறுவனம் எந்தவிதமான ஊக்குவிப்புக்களையும் வழங்குவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கூறுவிலை

சங்கங்களுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது கூறுவிலை கோரியே கொள்வனவு செய்கிறோம். சில வேளைகளில் கூறுவிலை கேட்ட பின்னரும் விலை கூடுகிறது என்பதை அறிவீர்கள். எமக்குக் கொள்வனவுகளைச் செய்ய ஆள் தேவையில்லை அனைத்துக் கம்பனிகள், நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றுடன் நேரடியாக நாம் தொடர்புகளை வைத்துள்ளோம். நாம் பொருள்களைப் பெற்றுத்தனியாரிலும் பார்க்க மிகக் குறைந்த விலையிலேயே வழங்கி வருகிறோம். உதாரணமாக சீனி, பாலுணவுப் பொருள்களைக் குறிப்பிடலாம்.

நாங்கள் தனியார் வர்த்தகர்களுக்குப் பொருள்களை விற்பதில்லை. எமது சங்கங்களின் நுகர்வோருக்கு மாத்திரமே பொருள்களை வழங்கி வருகிறோம். நாம் தனியார் வர்த்தகர்களுக்குச் சேதமடைந்த — பழுதடைந்த பொருள்களையேவிற்கிறோம்.

கடந்த 03—09—99 முதல் ஜி. எஸ். ரி. வரியை நீக்குமாறு ஜனாதிபதி, அமைச்சர்கள் வடக்கு — கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சு உள்ளிட்ட பலரிடமும் கோரிக்கைவிடுத்து வருகிறோம். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதையே பிரஸ்தாபித்தோம். ஆனாலும் கப்பல்களைக் குத்தகைக்கு அமர்த்திப் பொருள்களை தருவிக்கும் போது ஜி. எஸ். ரி. வரி விதிக்கப்படுகிறது அது கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாத்திரமன்றி அரச திணைக்களங்களுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் விதிக்கப்படுகிறது. ஜி எஸ் ரி. வரி எல்லோருக்கும் உண்டு

### நிவாரண அரிசி

நிவாரண விநியோகத்துக்கான அரிசி கொழும்பிலிருந்து இங்கு எடுத்துவரப்படுகிறது. இதை எவரும் கொள்வனவு செய்யவில்லை. அரசே அனுப்புகிறது. இதில் தரமான அரிசியும் தரமற்ற அரிசியும் மாறி மாறி வரும் தரமற்ற அரிசி குறித்து கொழும்பில் தான் முறையிட வேண்டும் இங்கு முறையிடுவதில் பயனில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணப் பொருள்களை விநியோகிக்காவிட்டால் அதைச் செய்வதற்குக் கிராம சேவகர்கள் போன்றோர் இருக்கிறார்கள். இது பொது மக்களுக்கு பல்வேறு விதமான அசௌகரியங்களை ஏற்படுத்தும்.

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களும் அதனுடன் இணைந்த சமாசமும் கடந்த காலங்களில் பெரும் இழப்புகளைச் சந்தித்தன. இத்தகைய கஷ்டங்களுக்கு மத்தியில் கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்து வருகின்றோம். இன்று தலைமை வகிக்கும் நான் இல்லாது போனாலும் என் பின்னால் சங்கங்களையும், சமாசத்தையும் வழி நடத்த ஆற்றலும், அறிவும், அனுபவமும் மிக்கவர் இயக்குநர் சபையில் இருக்கிறார்கள். நாமும் தேர்தல் மூலம் புள்ளடி போடப்பட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன் — என்றார்.

(இ-5-17-173)

## கலாசாலை ஆரம்பம்

பலாலி ஆசிரிய கலாசாலை மீண்டும் இன்று திங்கட்கிழமை முதல் வழமைபோல் இயங்கும் என்று கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

சகல விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் சமுகமளிக்கும்படி அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 20

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்படும் பொதுக் கலைமாணி இறுதிப்பரீட்சை அடுத்த மாதம் 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பேராதனை, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலும் இந்தப் பரீட்சையை நடத்துவதற்காக பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடங்கிய குழு ஒன்று இங்கு வருகை தர உள்ளது. —

யாழ். மாவட்டப்பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை என்பன தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் பா. நந்தகுமார் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## நாளை

கார்த்திகை 6

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

முற்பகல் 07.36 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

பி. ப. 4 . 25 வரை

சுபநேரம்: 10 40—12.10

ராகுகாலம்: 3.10—4.40

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தனக்கே தோழனாக இருக்கும் ஒருவன் எல்லோருக்கும் தோழனாக இருக்கிறான்.

— செனேகா

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், நவ. 20

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் வே க. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார். (ஐ-73)

## கல்யாண மண்டபம்

சுழிபுரம், நவ. 20

தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் ஆலயப் பகுதியில் கல்யாண மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இம்மாதக் கடைசியில் இடம்பெறவுள்ளது.

நிலம் எடுக்கும் வைபவம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் அருட்கவி. சி. விநாசித்தம்பிப் புலவரால் நிறைவு செய்யப்படும். இதனைத் தொடர்ந்து அத்திவாரம் வெட்டுதல் இடம்பெறும். (இ-28)

## வானொலியில் சாயி சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 20

பகவான் சத்திய சாயிபாபாவின் 75 ஆவது பிறந்த நாள் 23 ஆம் திகதி ஆகும். இதனையொட்டிய சொற்பொழிவு 22 ஆம் திகதி மாலை 6. 15 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பப்படவுள்ளது.

ஓய்வு பெற்ற சங்க அதிகாரி 'பரோபகாரமணி' கே. கே. சுப்பிரமணியம் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (இ-5)

## வகுப்பறைக்கு கூரை அமைப்பு

சண்டிலிப்பாய், நவ 20

உரும்பிராயில் இடம்பெயர்ந்து இயங்கி வரும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள தற்காலிக வகுப்பறைக் கொட்டகைகளில் கூரைத் தகடு பொருத்துவதற்காக அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் ஐந்தரை லட்சம் ரூபாவை நுண்கருத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

இந்த நிதியைக்கொண்டு புதிய கூரைத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதாக மகா வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராஜா தெரிவித்தார். (ஐ-135)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ் மாவட்ட தபாலகங்களில் கடமையாற்றும் இரண்டாம் தர தபாலதிபர்கள் எட்டுப்பேர் கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் முதலாம் தர தபாலதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

தபாலதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டவர்களின் விவரம் வருமாறு:—

எஸ். சிவசுப்பிரமணியம், வி. அந்தோனிப்பிள்ளை, எம். டெனிசியஸ், எம் சிவதாசபிள்ளை கே. சரவணநாதன், ஏ. சுந்தரலிங்கம், திருமதி ஏ. சிவபாக்கியம், ஏ. லோகஞானம்.

இவர்களுக்கான பதவிஉயர்வுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் தமது பதவிகளை புதிய இடங்களில் பொறுப்பேற்பார்கள் எனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6-10)

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பான்சி கடை, பாட்டா கடைக்கு பாவிக்கக்கூடிய பெரிய ஷோகேஸ், கவுண்டர், றொட்டி மேசை மற்றும் வீட்டுத் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை அருகில்) (80674)

### மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் கடமைபுரியும், புனர்பூசம் 1 ஆம் பாதம், வயது 37, படித்த, அழகுள்ள, இந்துசமய மணமகனுக்கு கௌரவ குடும்பத்திலிருந்து படித்த, அழகுள்ள மணமகளை உறவினர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் கொழும்பு வந்து பெண்ணை அழைத்துச் செல்வார். சீதனம் பெற்றோர் விருப்பம். பூரண விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 1141 மே/பா.உதயன். (80659)

### பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத் தடை, தொழில் தடை, கல்வித் தடை,பிரயாணத் தடை என்பன தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும். தொடர்பு: செவ்வாய், சனி ஆகிய நாள்களில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். - ஞாயிற்றுக் கிழமை பழம் பிள்ளையார் கோயில் மடம், மல்லாகம். (80553)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/=) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல:- 3081 (C/13637)

### காணி விற்பனைக்கு

யாழ்நகர், கன்னாதிட்டி ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 12/41 கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (80684)

### இலக்கியக்கட்டுரைகள்

இலங்கை வானொலி பவளவிழா நாடகப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்ற அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன் படக்கூடிய 38 கட்டுரைகள். (80624)

### சனிமாற்றம்

11-04-2001 வரை சனி வக்கிர மாற்றம். 01-02-2001 வரை வியாழ வக்கிர பலன்கள். ரூபா 10/=. எங்கும் விற்பனையாகின்றன. கணிப்பு:- சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. தொலைபேசி:- 021-2753. (8065?)

### தவறிவிட்டது

கந்தையா தில்லையம்பலம் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (091050925) நிலாவரைக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: எஸ். சூரியமூர்த்தி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (80694)

## விசர்நாயினால் 9 பேர் கடியுண்டனர்

நெல்லியடி,நவ.20

வளவு ஒன்றிலிருந்து வெளியேறிய விசர்நாய் ஒன்று, அப்பகுதியால் சென்றவர்களை கண்டபடி கடித்துக் குதறியது. இதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒருவர் உட்பட 9 பேர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை விஸ்வகுல வீதியில் இடம்பெற்றது. (இ-109)

## கைப்பணி பயிற்சி நிலையம்

நெடுந்தீவு,நவ.20

எழுவைதீவுப் பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி அங்கு கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகின்றது. (இ-111)

## இணக்கம்


கொழும்பு,நவ.20

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களில் 82 பேரை விடுவிப்பதற்கு இந்தியா இணங்கியுள்ளது. (ஐ-8)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 - 03 - 1962 இலங்கை



ஆண்டவன் அடியில் 13 - 11 - 1998 சுவிஸ்

### அமரர் செல்லையா சிவாஸ்வரன்

திதி: அபரபக்க தசமி (20.11.2000)

ஆருயிரே! என்னைக் கரம்பிடித்த தெய்வமே!
ஆண்டு இரண்டல்ல ஆயிரம் சென்றாலும்
ஆறுமோ என்நெஞ்சு ஆருயிரே! ஐயா! - எமக்கு
ஆயிரம் உறவுகள் இருந்து என்ன அப்பா
ஆதரிப்பார் இருந்தென்ன எங்கள் அப்பாபோல் ஆகுமோ?
அப்பா உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரங்கள், மச்சான், மச்சாள்மார், மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்.**

*செல்வறுங்கம், இணுவில் மேற்கு, சுன்னாகம்.*

(80687)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 - 03 - 1945



ஆறுமுகன் தாளடியில் 02 - 12 - 1999

### திருமதி செல்வராணி சிவசுப்பிரமணியம்

திதி : 20-11-2000

ஆண்டொன்று கடந்தாலும் உம் பிரிவு ஆளுதம்மா!
அப்பாவும், இருவர் நாமும் ஆருக்கெடுத் துரைத்திடுவோம்
அபரபக்கக் கார்த்திகைத் தசமிதனில் கார்த்திகேயன்
அபயம் அளித்திட அவனடி தாள் பணிந்தாய்!
ஆறுபடை வீடுடையான் அழகன் திருக்கழலடி
அயராது பற்றியோர்க்கு ஆறுதல் வேறுண்டாமோ?
ஆலய வீதி வலம்வந்தால் ஆயிரம் கோடி புண்ணிய மென்று
அனுதினமும் மாவைப்பதி ஆலயம் சுற்றி வந்தோம்
ஆன மனையை இழந்தோம் அம்மாவையும் இழந்தோம்
அல்லல்படுமெம் நிலைக்கு ஆறுதலருள் வாய் முருகா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பளை, தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:- *வெளிப்புலம், புகையிரத வீதி, சுன்னாகம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
**க.சிவசுப்பிரமணியம்** (கணவர்)
**சி.தமயந்தி** (மகள்)
**சி.சிவமேகலை** (மகள்)

(80562)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 02 - 1943



மறைவு 09 - 10 - 2000

கல்வியின் சுடர்விளக்காய் விளங்கிய

### அமரர் S.துரைராஜா

**ஐயா!**

**நீவிர் வள்ளுவப் பெருந்தகையின்**

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."***

எனும் வாக்குக்கமைய வானுலகில் தெய்வமாவதுடன் இப்பூவுலகில் அனைவரது உள்ளத்திலும் தெய்வமாக என்றும் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். கோட்ட அதிபர்கள்.**

(80605)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வாழ்வில் கலந்தது 02 - 08 - 1922



இறப்பில் சேர்ந்தது 21 - 10 - 2000

நவாலியூர்

### அமரர் மருதர் முருகேசு

எங்கள் நல்வாழ்வுக்காக நாளும் உழைத்து
எம் முன்னேற்றத்தில் பங்குகொண்டு வாழ்ந்த
எம்மினிய பாசத்தின் உறைவிடமே!
எங்கள் உயிர் இவ்வுலகில் இருக்கும் வரை
என்றும் எப்பொழுதும் உம் நினைவுடனே வாழ்வோம்.

**- குடும்பத்தினர்.**

"குமரகிரி"
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*

(80604)

---

## 29ஆம் நாள் நீங்கா நினைவும் நன்றி நவிலலும்



### திருமதி செல்லத்துரை ஜெயலட்சுமி

**மண்ணில் 08-11-1914** **விண்ணில் 23-10-2000**

எப்பவோ முடிந்த கதைகள்
எனக்கு எல்லாம் தெரியுமென்பீர்
தப்புக்கணக்கு போட்டுவிட்டோம்
தவிக்கிறோம் உம்மைவிட்டே
அப்பவே நினைத்தோம் ஏதோ
ஆகத்தான் போகு தென்று
அம்மாவாய் அருமை மாமியாய்
பாட்டியாய் பூட்டியாய் பலபேராய்
எல்லோர் நெஞ்சிலும் நிறைந்தீரே.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

23-10-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் பாசத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு பலவழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு -

இன்று (20.11.2000) திங்கட்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*துளசி, ஏழாலை மேற்கு, ஏழாலை.*

(80690)

# இன்றைய விமான சேவைகளில் பயணம் செய்வோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.20

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமானச்சேவையில் இன்று இரு சேவைகள் இடம்பெற விருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையில் பயணம் செய்ய இருப்பவர்களின் பெயர் விவரங்களை 'றான்' அலுவலகம் அறிவித்துள்ளது. அவை வருமாறு :-

### முதலாவது சேவை

★ எம்.இராஜராம் (435211330V)
★ செல்வி யு.சிவபாதசுந்தரம் (515683470X)
★ ரி.மயூரன் (781612502V)
★ ரி.கருணாநிதி (581261780V)
★ ரி.மகேஸ்வரன் (721432831V)
★ கே.மகேஸ்வரன் (481740310V)
★ திருமதி கே.சிவயோகம் (375271354V)
★ கே.கமலாதேவி (665610985V)
★ கே.புஸ்பலதா (708572470V)
★ செல்வி என்.சுமணா(728230568V)
★ திருமதி ஆர்.காஞ்சனாதேவி (உடுவில் கிழக்கு)
★ ரி.வேல்மகீபன் (800973120V)
★ செல்வி எஸ்.சுமதி(755561916V)
★ எஸ்.சுப்பிரமணியம்(382970179V)
★ எஸ்.முருகதாஸ் (621203885V)
★ எம்.கிருகேஸ்வரன்(760213955V)
★ எஸ்.இராஜேந்திரம்(650922360V)
★ திருமதி எஸ்.பராசக்தி(316000193V)
★ எம்.செல்வநாயகம்(372101334V)
★ ஏ.ஆறுமுகம் (303101594V)
★ ஏ.பூமணி (326874299V)
★ செல்வி ர.மாலதி (645601955V)
★ செல்வி ஏ.விஜிதா(725852762V)
★ கே.விக்கினேஸ்வரன்(530792471V)
★ பி.நாகரத்தினம் (511380260V)
★ எஸ்.ரவீந்திரகுமார்(622862313V)
★ என்.கலையரசி (675981767V)
★ கே.புஸ்பேந்திரா (780020237V)
★ பி.கனகரத்தினம் (443280685V)
★ டி.உமாஜினி (775853867V)
★ டி.பத்மாவதி (525883408V)
★ திருமதி பி.சசிகலா(686591452V)
★ கே.பரமநாதன் (260990131V)
★ பி.பிரபாகரன் (751212542V)
★ எஸ்.இராசேஸ்வரி(522291774V)
★ எஸ்.ஞானானந்தன்(271902581V)
★ ஜி.ரதிதேவிமலர் (317350880V)
★ எஸ்.தங்கம்மா (425531003X)
★ எஸ்.தாரிணி (797322430V)
★ எஸ்.தட்சிணாமூர்த்தி(452251626V)
★ கே.குலதேவி (778220578V)
★ எஸ்.ஜே.பி.டி.ராஜ்குமார் (631820670V)
★ எம்.நாகம்மா (185770397V)
★ எஸ்.ஞானமணி (416011672ஏ)
★ என்.சண்முகநாதன்(291621988V)
★ என். சிவநந்தன் (பி.பி.-404767061)
★ எஸ்.மகாலட்சுமி (436262508V)
★ எஸ்.பிரணவன் (751141963V)

### இரண்டாவது சேவை

★ ரி.துரைராஜா (772191561V)
★ எஸ்.விநாயகமூர்த்தி(470272198V)
★ வண.போல் நட்சத்திரம் (522373001V)
★ ஏ.ஏ.றோசி விமலா(728393459V)
★ வண.எம்.நிமலப்பிரியா (716541681V)
★ பி.முரளிதரன் (671701011V)
★ ஏ.தில்லைநாதன் (380590379V)
★ ஐ.ஞானலஷ்மி (596442894V)
★ எஸ்.சுந்தரலிங்கம்(511801486V)
★ திருமதி எஸ்.திலகவதி(547293100V)
★ ஆர்.துரைராஜா (381710190V)
★ தயாபரன் (760932590V)
★ ரி.பிரபாகரன் (762763869V)
★ எஸ்.அருந்தவரட்ணம்(513182465V)
★ எம்.கதிரித்தம்பி (333411046V)
★ திருமதி கே.சிவபாதம்(398651626V)
★ எஸ்.பாலேந்திரன் (682340550V) (குழந்தையுடன்)
★ வி.நாகராஜா (621851012V)
★ என்.விஜயராணி (655742913V)
★ என்.தர்சிகா (வட்டுக்கோட்டை)
★ என்.கௌஷிகா(வட்டுக்கோட்டை)
★ என்.பிரதீபா (வட்டுக்கோட்டை)
★ திருமதி வி.சின்னப்பிள்ளை (வட்டுக்கோட்டை)
★ கே.வசந்தமாறன் (773310416V)
★ ரி.அம்பிகைதாஸன்(782151401V)
★ எஸ்.தம்பிநாயகம் (510700309V)
★ திருமதி பி.சாந்தினி(458312141V)
★ பி.சுதர்சன் (762143607V)
★ எஸ்.செல்வதாஸ் (793202342V)
★ எஸ்.ஜெயலக்ஷ்மி(615594733V)
★ ஆர்.சசிக்குமார் (752010749V)
★ திருமதி பி.கண்மணி(245930569V)
★ ஏ.ஜே.செல்வநாதன்(472773135V)
★ ஜே.எஸ்.ஞானரூபி(795314300V)
★ கே.சசிக்குமார் (752421692V)
★ கே.செல்லம்மா (356100344V)
★ பி.மயூரதன் (822051472V)
★ வி.புஷ்பராணி (527973269V)
★ ஈ.ஏ.ஏ.ஜெயராஜா (803582178V)
★ என்.உதயசங்கர் (810042419V)
★ பி.சிவசுதன் (741402998V)
★ ஸி.ஜெயராஜா (602732991V)
★ எஸ்.உதயசந்திரிகா(826910908V)
★ எஸ்.பாலமுகுந்தன் (0903004722)
★ எஸ்.பத்மலோஜினி(585191574V)
★ கே.பிரசன்னா (831112549V)
★ எம்.மனோன்மணி (567661225V)
★ ஏ.ரட்ணசிங்கம் (432362256V)

(ஐ-5-8)

# இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத வன்னிக்கு மருந்துப் பொருள்கள்

## நாளைய தினம் அனுப்ப ஏற்பாடு

கொழும்பு,நவ.20

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான இந்த ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்குரிய மருந்துப் பொருள்கள் அனைத்தும் நாளை செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் துணையுடன் எடுத்துச் செல்லப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கி உள்ளது.

ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டு வவுனியா களஞ்சியத்தில் தேங்கிக் கிடந்த மருந்துப் பொருள்கள், சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருள்கள், 'அன்ரிபயாற்றிக்' மருந்துகள் என்பனவே எடுத்துச் செல்லப்பட உள்ளன.

கடந்த சில மாதங்களாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பப்படவில்லை. இதனால் அங்கு மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது அனுப்பப்பட உள்ள மருந்துப் பொருள்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் அடுத்த மாத இறுதிவரை மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் பலகல்ல, வவுனியா இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொன்சேகா ஆகியோருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் ஐ. தே.க வின் யாழ்.மாவட்ட உறுப்பினர் மகேஸ்வரன் கடிதம் எழுதி உள்ளார்.

(இ-ம)

# சொல்ஹெய்ம் -பிரபா பேச்சு குறித்து அரசாங்கமே தெளிவுபடுத்த வேண்டும்

## ஆஸ்திரேலிய பிரதித் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.20

நோர்வே சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுடன் வன்னியில் நடத்திய பேச்சுக்கள் குறித்தும், அது இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட காரணம் குறித்தும் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு அரசாங்கமே தெளிவுபடுத்த வேண்டும்.

ஆஸ்திரேலிய பிரதித் தூதர் ஹெதரின் ஹெத்மன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நோர்வே நாடு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் குழப்பமான நிலையே நீடித்து வருகிறது. இது இனங்களுக்கிடையிலான கலவரத்தை மீண்டும் ஆரம்பிக்க ஆதாரமாக இருக்கக் கூடாது.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எமது நாடு பூரண ஆதரவு வழங்கும். அதேசமயம் சமாதான முயற்சி குறித்த நகர்வுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆஸ்திரேலிய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமென்றும் அவர் சொன்னார்.(ஐ-8)

# இலங்கைப் பிரச்சினையில் தலையிட வேறு எந்த நாட்டுக்கும் உரிமையில்லை

## அமைச்சர் கதிர்காமர் சொல்கிறார்

கொழும்பு,நவ.20

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுவதற்கு வேறு எந்த நாட்டுக்கும் உரிமையில்லை - என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ள இந்த வேளையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

'இந்து' பத்திரிகைக்கான பேட்டியில் அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நோர்வே சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்முக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களையும் அது குறித்த நிலைமைகளையும் நாம் எச்சரிக்கையுடன் மதிப்பிடவேண்டியுள்ளது. ஏனெனில் இது போன்ற நிலைமைகள் கடந்த காலத்தில் அரசுக்குக் கசப்பான பல அனுபவங்களைக் கொடுத்துள்ளன.

சொல்ஹெய்ம் - பிரபா சந்திப்பு முக்கியமான ஒன்றா என்பது குறித்தோ அதிலிருந்து பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பது குறித்தோ இப்போது எதுவும் கூறமுடியாது.

நடந்த பேச்சுக்களின் போது புலிகளின் தலைவர் அரசுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை என்று நோர்வேத் தூதுவர் கூறியுள்ளார். ஆனால் பேச்சுக்களின் போது பல் வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். நிலைமை சிக்கலாக இருப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

சமாதான முயற்சிகள் உட்பட சகல விடயங்கள் தொடர்பாகவும் இந்தியாவுக்கு இலங்கை அரசு அறிவிக்கும் என்பதனை நோர்வே அரசுக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம்.

இப்போதைய விடயங்களில் இந்தியா ஈடுபடாவிட்டாலும் என்ன நடக்கிறது என்பதை அது மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது - என்றார். (அ-ம-8)

# ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து திரும்பினர்

## நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக ஐரோப்பிய யூனியனின் இருபிரதிநிதிகள் இருநாள் பயணமொன்றை மேற்கொண்டு யாழ். வந்து திரும்பினர்.

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்கள் பலாலியில் இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் குறித்துப் பேசினர்.

அராலி, சங்கானை, வட்டுக் கோட்டை, மானிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர். அத்துடன் நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ள மக்களையும் பார்வையிட்டனர்.

ஐரோப்பிய யூனியனின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளையும் அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் நேற்றுமுன்தினம் அவர்கள் மீண்டும் கொழும்பு திரும்பினர். (ம)

### வர்த்தகர்களின் பற்றுச் சீட்டுகள் விநியோகம்

தென்மராட்சி,நவ.20

சாவகச்சேரி நகர வர்த்தகர்களுக்கு இலங்கை மின்சார சபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து அனுப்பப்பட்ட பற்றுச் சீட்டுக்களும் கடிதங்களும் கரவெட்டியில் இயங்கும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகத்துக்கு வந்துள்ளதாகவும் வர்த்தகர்கள் இவற்றினைப் பெற்றுக் கொள்ளுமாறும் மன்றச் செயலாளர் வ.இராசதுரை அறிவித்துள்ளார்.

(ஐ-117)

# வரவு செலவுத் திட்டத்துக்கு பதில் மதிப்பீட்டுக் கணக்கு அறிக்கை

## நாடாளுமன்றில் சமர்ப்பிக்க ஏற்பாடு

கொழும்பு,நவ20

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்திற்குப் பதிலாக மதிப்பீட்டுக் கணக்கு அறிக்கையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்தக் கணக்கு அறிக்கை டிசம்பர் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஏற்கனவே மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டம் டிசம்பர் 18ஆம், 19ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெற உள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி வேலைகளில் உதவி வழங்கும் நாடுகளுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் மதிப்பீட்டுக்கணக்கறிக்கை தயாரிக்கப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஆக்கபூர்வமாகவும் முன்னேற்றகரமாகவும் நடந்து கொள்வதாகக் காட்டிக்கொள்ளும் ஏற்பாடுகளில் டிசம்பர் மத்திக்கு முன்னர் அரசு தீவிரமாக ஈடுபடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். எல்லாம் நிதி உதவி வழங்கும் நாடுகளை "வளைத்துப்பிடிக்கவே" என்றும் அவர்கள் வர்ணித்துள்ளனர்.

(ஐ-8)

# நிவாரணத்துக்கு வழங்க முடியாத நிலையில் 100 மெ. தொன் பருப்பு

யாழ்ப்பாணம், நவ.20

நவம்பர் மாத நிவாரணத்துக்கென கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பருப்பில் சிவப்பு, மஞ்சள் நிறப் பருப்புகள் ஒன்றாகக் கலந்து இருப்பதால் அவற்றை விநியோகிக்க முடியவில்லை என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

100மெ. தொன் பருப்பு இவ்வாறு கலக்கப்பட்ட நிலையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பருப்பை பரிசோதகர் மூலம் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதனால் பருப்பைத் தவிர்த்து அரிசி மற்றும் சீனி, பாஸ்மா போன்ற பொருள்கள் தற்பொழுது நிவாரணத்துக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

5 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு லக்டோஜன் ஒன்றும் வழங்கப்பட்டு வருகின்றது.

(இ-5)

### கிட்டுப் பூங்கா புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

முத்திரைச் சந்தியிலுள்ள கிட்டுப் பூங்காவை புனரமைக்க யாழ். மாநகர சபையினால் பிரமான அடிப்படையிலான நிதியிலிருந்து 2 லக்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து கிட்டுப் பூங்காவின் மலசலகூடம், குழாய்க்கிணறு, பாதுகாப்பு உத்தியோகத்தர் அறை, தண்ணீர் தாங்கி போன்றவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)


**சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை.**

**பரிசளிப்பு விழாவும்,கலைவிழாவும் 2000**

தலைவர் : திரு.வி.ஏரம்பமூர்த்தி (அதிபர்)
காலம் : 23.11.2000 வியாழன் பி.ப 1.00 மணி.
பிரதம விருந்தினர் : திரு.அ.தற்பரானந்தன் (உதவிக்கல்விப்பணிப்பாளர் - உடுவில் கோட்டம்)
சிறப்பு விருந்தினர் : செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் (ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
கௌரவ விருந்தினர்கள் :திரு.க.தெட்சணாமூர்த்தி (இளைப்பாறிய அதிபர்)
திருமதி.பா.சிவானந்தம். (இளைப்பாறிய அதிபர்)

**5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றோம்.**

*தோற்றிய 14 பேரில்*

1. செல்வி மிதுலா வரதராசா
2. செல்வன் சிவகுமாரன் பிரணவன்
3. செல்வன் கந்தசாமி அர்ஜித்
4. செல்வன் சிவநேசன் ரேனுசன்
5. செல்வி அபிராமி சண்முகராஜா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

மேலும் 5 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

(C/13908)

அதிபர்,ஆசிரியர்கள், பாடசாலை.அ.வி.சங்கம், பழைய மாணவர்கள்.

# ராஜீவ் கொலை குறித்து விசாரிக்கும் புலனாய்வுக் குழு கொழும்பு வருகை

புதுடில்லி,நவ.20

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை குறித்து விசாரணை செய்துவரும் இந்திய மத்திய புலனாய்வுத்துறையின 3 உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

ஜெயின் ஆணையகம் செய்துள்ள பரிந்துரையின்படி ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாக புலனாய்வுத் துறையின் கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த விசாரணைகளின் ஒரு கட்ட நடவடிக்கையாகவே மேற்படி உயர் மட்ட புலனாய்வுக் குழு கொழும்பு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் கொழும்பில் விசாரணைகளை நடத்தவுள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இருவாரங்கள் கொழும்பில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள இந்தக் குழுவுக்கு புலனாய்வுத்துறை அதிகாரியான கி. தியாகராஜன் தலைமை வகிக்கிறார்.

இவர்கள் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளுடனும் புலனாய்வுத்துறை அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஐ-6)

# தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்; முகாம்களில் உள்ளோர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

குடாநாட்டில் கடந்த 48 மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ந்து பெய்துவரும் மழையால் சில இடங்களில் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர். அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாதவாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் நகரில் பஸ் நிலையப் பகுதியில் வெள்ளம் தேங்கியுள்ளது. சேதமடைந்துள்ள வடிகால்களிலும் வெள்ளம் நிரம்பியுள்ளது.

மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை ஆகிய பகுதிகளில் தற்காலிக குடிசைகளில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பில் நேற்று

# மழைக்கு மத்தியிலும் படையினர் தேடுதல்

மட்டக்களப்பு,நவ.20

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இடங்களில் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று மாலை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்.

ஏறாவூர், தளவாய், ஐயங்கேணி ஆகிய பகுதிகளில் தீவிர தேடுதல்கள நடத்தப்பட்டன.

வீடுகளில் இருந்து பொதுமக்கள் அழைக்கப்பட்டுப் பொது இடங்களில் வைத்துக் கடும் சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இந்தத் தேடுதல் நேற்று இரவு 8 மணிவரை தொடர்ந்தது. (ஐ-3-21)

# படையினரைக் கண்டு ஓடிய இளைஞன் சூட்டுக்குப் பலி!

## மட்டு- சந்திவெளியில் சம்பவம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் சந்தி வெளியில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கறுவாக்கேணியைச் சேர்ந்த நடராசா செந்தூரன் என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இவரது மரணம் தொடர்பாக அந்தப்பகுதி மரண விசாரணை அதிகாரி வீரக்குட்டி நேற்று மரண விசாரணை நடத்தினார்.

விசாரணையில் சாட்சியம் அளித்த சிப்பாயான குலசூரிய யோசப் பெர்னாண்டோ என்பவர் கூறியதாவது :-

"சம்பவதினம் இறந்தவரும் மற்றுமொருவரும் வீதியால் சென்றனர். இருவரையும் மறித்தபோது இருவரும் ஓடினர். அதைத் தொடர்ந்து அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம். பிரஸ்தாப இளைஞனின் சடலத்தை மீட்டோம். அவரிடம் இருந்து கிரனேட் ஒன்றும் மீட்கப்பட்டது" என்று கூறினார்.

இவரது சடலத்தை பரிசோதனை செய்த மருத்துவர் சாட்சியம் அளிக்கையில் -

இறந்தவரின் உடம்பில் சூட்டுக்காயத்துடன் சிகரெட்டால் சுடப்பட்ட காயங்களும் காணப்பட்டன என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி மரண விசாரணை அதிகாரி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.(ஐ-21-3-8)

---

### ஜனாதிபதியை....

• (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அது குறித்துப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த இளைஞர் வானொலி சேவையுடன் தொடர்பு கொண்டு பேசிய இலக்கம் 'ரெலிகொம்' ஊடாகக் கண்டு பிடிக்கப்பட்டது. கொழும்பு கறுவாக காடுப் பொலீஸார் அடுத்த இரு மணி நேரத்துக்குள் அந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைதுசெய்தனர்.

கைதான இளைஞர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

---

### பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிவுகள் இன்று காலை இடம்பெறவிருக்கின்றன.

இம்மாதம் 21ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள், வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து திரும்பிச் செல்ல வேண்டியவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் இன்று தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


**பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.**
**பழைய மாணவர் சங்கம்**

எமது சங்க நிர்வாக சபை உறுப்பினராக விளங்கிய
**திரு. தியாகராஜா மகேஸ்வரன்**
நாடாளுமன்ற உறுப்பினராகத்
தெரிவு செய்யப்பட்டதைக் கௌரவித்து நடைபெறும்
**விருந்துபசாரம்**

*இடம் :- பரியோவான் கல்லூரி, றீற்றோ ஞாபகார்த்த மண்டபம்.*
*காலம் :- இன்று 20-11-2000 திங்கட்கிழமை*
மாலை 4.30 மணி.

பழைய மாணவர்கள் அனைவரையும் துணைவர் சகிதம்
சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
'நன்றி'

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
(C/13907)


# இன்று இரு விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,நவ.20

பலாலிக்கும் - இரத்மலானைக்கும் இடையில் இன்று இரு விமான சேவைகள் இடம்பெறவுள்ளன என்று யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

முதலாவது சேவையில் செல்வதற்காக பயணச் சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை 8 மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சேவையில் செல்வதற்காக பதிவு செய்தவர்களை பயணச் சீட்டுப் பெறுவதற்காக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை விமான சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்பு கடந்த இரு தினங்களாக ஒரு சேவை மட்டுமே இடம்பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

(இன்றைய இரு சேவைகளிலும் பயணம் செய்ய இருப்பவர்களின் பெயர் விவரங்கள் 9 ஆம் பக்கத்தில்.) (ஐ-3)

---

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டுள்ளன.

சித்தாண்டியில் உள்ள அகத்தியர் குளம் உடைப்பெடுத்துள்ளது. தரவைக் குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று தினங்களும் 198.7 மில்லி லீற்றர் மழை பெய்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நேற்று மட்டும் பிற்பகல் வரை 76.2 மில்லி லீற்றர் மழை பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் உள்ள வாவியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அந்த வாவி உடைப்பெடுத்தால் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இன்று முதல் சமைத்த உணவு வழங்கப்பட இருப்பதாக மட்டக்களப்பு பிரதேச செயலர் ஆர்.மோனகுருசாமி தெரிவித்தார்.

இதேவேளை -

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் அங்கு மூவாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சாய்ந்தமருது, நிந்தவூர் பகுதிகளில் 1,500 பேர் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

கல்லோயாப் பகுதியில் 32,000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட ஊர்காவலர் ஒருவரின் சடலம் மகாஓயாவில் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ-3-21-14-8)


**லஷ்சுமி**
**திரை அரங்கு**
சத்தியராஜ், அருண்பாண்டியன், குஷ்பு, ரோஜா
நடிப்பில்
**புரட்சிக்காரன்**
(C.D பிரதி)
காட்சிகள் :
**10.30, 2.30** (ப.நே.)
யாழ்.வீதி, மானிப்பாய்.
(C/13910)


# 10 பேரின் சடலங்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,நவ.20

மட்டுவில் தெற்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலின்போது உயிரிழந்ததாகத் தெரிவித்து பத்துப் பேரின் சடலங்கள் நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சரசாலைப் பகுதி இராணுவ அதிகாரியினால் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலங்கள் அடையாளங் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களில் பெரும்பாலானவை பெண்களுடையவை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-3-6)

# நோர்வே தூதரகத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,நவ.20

இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நோர்வே மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு உள்நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதை அடுத்து கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையில் நோர்வே ஈடுபடத் தொடங்கியபோது ஆரம்பத்தில் கொழும்பு வாட் பிளேஸில் உள்ள நோர்வேத் தூதரகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே.

அண்மையில் நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்ததைத் தொடர்ந்து தெற்கில் சிங்களத் தீவிரவாத அமைப்புகள் நோர்வேயின் முயற்சியைக் கடுமையாகச் சாடி வருகின்றன. தூதரகத்துக்கு முன்னால் கடந்த வாரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது அதனை மூடிவிட்டு நோர்வே திரும்புமாறும் இல்லையேல் பாரதூரமான விளைவுகள் உண்டாகும் எனவும் எச்சரிக்கைக் கோஷம் எழுப்பப்பட்டதும் தெரிந்ததே. இந் நிலையிலேயே கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-6)

## காலநிலை ஓரளவு சீரடையும்

கொழும்பு,நவ.20

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இன்று காலநிலை ஓரளவு சீரடையக் கூடும் என வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்பகுதியில் ஏற்பட்டுள்ள பவனத் தாழமுக்கமே தற்போதைய காலநிலை மாற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் அதிக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய மாகாணங்களிலும் சுமாராண மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

---

### மட்டுவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வது:-

சாவகச்சேரிக்கு மேற்கே சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் யாழ். - கண்டி வீதிக்கு வடக்கே உள்ள மட்டுவில் தெற்கைக் கைப்பற்றுவதற்காக நேற்று அதிகாலை 'கினி ஹிர - 4' படை நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர்.

ஆட்லெறி மற்றும் மோட்டார்களின் உதவியுடன் புலிகளின் நிலைகள் மீது படையினர் தாக்குதல் மேற்கொண்டனர். தாக்குதல் ஆரம்பித்து சில மணி நேரத்தில் படையினர் ஆறு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றினர். அந்தப் பிரதேசத்தில் ஊடுருவியிருந்த புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. படையினர் விடுதலைப் புலிகளின் பத்து உறுப்பினர்களின் சடலங்களையும் அவர்களது ஆயுதங்களையும் மற்றும் இராணுவப் பொருள்களையும் அப் பிரதேசத்தில் கண்டனர்.

இந்த நடவடிக்கையில் ஏழு படையினர் கொல்லப்பட்டனர், நான்கு அதிகாரிகள் உட்பட 27 படையினர் காயமடைந்தனர்.

கைப்பற்றிய பிரதேசங்களைப் பலப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர் - என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

நேற்றைய படைநடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உக்கிரமான நேரடி மோதல்கள் இடம்பெற்றதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. சுமார் ஆறு மணித்தியாலங்களாக இரு தரப்பினரும் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படை நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எந்தத் தகவலும் நேற்று இரவுவரை வெளியாகவில்லை.

இப்படை நடவடிக்கை பூர்த்தியானதா மேலும் தொடருமா என்பது தொடர்பாக இராணுவத் தரப்புத் தகவல்கள் எதுவும் நேற்று இரவுவரை கிடைக்கவில்லை. மட்டுவில் பகுதியை அண்டிய தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து ஷெல் மற்றும் குண்டுச் சத்தங்கள் நேற்றிரவும் கேட்டபடி இருந்தன.(ஐ-3-6-8)

## படையினரின் 4 சடலங்கள் புலிகளால் மீட்பு

வவுனியா,நவ.20

ஓமந்தைக்கு வடக்கே விளக்குவைத்தகுளம் பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் முன்னேறிய படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது 4 படையினரின் சடலங்களை மீட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் பெரும் எடுப்பில் தமது நிலைகளுக்குள் ஊடுருவும் நோக்குடன் முன்னேறிய படையினர் மீது முறியடிப்புத் தாக்குதல் மேற்கொண்டு அவர்களைப் பின்வாங்க வைத்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் படையினரின நான்கு சடலங்களையும், பெரும் எண்ணிக்கையான ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் தமது தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் - புலிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-3-6-8)

---

### தமிழ்க் கைதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத்தில் கைதுசெய்தவர்களை உடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

○ பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இருந்த தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டது போன்று ஏனைய சிறைகளிலுள்ள தமிழ்க் கைதிகளும் கொலை செய்யப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சகல தமிழ்க் கைதிகளையும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள சிறைகளுக்கு மாற்ற வேண்டும்.

○ யாழ்ப்பாணத்தில் உடனடியாக மேல் நீதிமன்றத்தை இயங்கச் செய்ய வேண்டும்.

○ செம்மணிப் புதைகுழி வழக்கை யாழ்ப்பாணத்திலேயே விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஐ-3)


**அறிவொளி-NALLUR**
**G.C.E. A/L 2002**
ELECTRICITY : திரு. ஸ்பெல்மன்
MON. FRI - 5.00 P.M (20.11.2K)
**2001 கல்வியாண்டு**
Yr. 7 - O/L வரை
ஆரம்பம்: 11.12.2000 திங்கள்
மிக விரைவில் A/L 2003

**சிந்து திரையரங்கு**
உரும்பிராய்ச் சந்தி
சத்தியராஜ், அருண்பாண்டியன், மன்சூர் அலிகான், ரோஜா, குஷ்பு, மணிவண்ணன், செந்தில்
நடிப்பில்
**புரட்சிக்காரன்**
காட்சிகள் :
10.30, 3.00
(வெட்டுப்படாத பிரதி)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.